**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ஓ.மு.எண்.842/ஆ5/2024, நாள்.18.03.2024**

.....

பொருள் பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – தினமலர் நாளிதழ் சார்பில் நடத்தும் – வழிகாட்டி மற்றும் கல்வி கண்காட்சி நிகழ்ச்சி 30.03.2024 மற்றும் 31.03.2024 ஆகிய இரண்டு நாட்களுக்கு நடைபெறுதல் – உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 10ம் வகுப்பு, 11ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு பயிலும் மாணவர்கள் கலந்துக்கொள்ள தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை வேலூர் மாவட்ட தினமலர் அலுவலக மேலாளரின் கடிதம் நாள். 08.03.2024

.....

வேலூர் மாவட்டம், தினமலர் நாளிதழ் சார்பாக பள்ளி மாணவர்களுக்கு உயர்கல்வி பெறுவதற்கான வழிமுறைகள் குறித்த வழிகாட்டி மற்றும் கல்வி கண்காட்சி நிகழ்ச்சியானது 30.03.2024 (சனிக்கிழைமை) மற்றும் 31.03.2024 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய இரண்டு நாட்கள் காலை 10.30 மணி முதல் மாலை 6.00 மணி வரை வேலூர் காவலர் பயிற்சி மைதானத்தில் நடைபெறவுள்ளது எனவும், இந்நிகழ்ச்சியில் அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் 10ம் வகுப்பு, 11ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்கள் கலந்துக்கொள்ள பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட நிகழ்ச்சியில் மாணவ / மாணவிகள் கலந்துக்கொள்ளும் பொருட்டு மாணவர்களின் பெற்றோருடன் பாதுகாப்பாக அழைத்துச் சென்று பயன்பெற மாணவர்களுக்கு தெரிவிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் தனியார் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1. மாணவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் மட்டுமே இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேண்டும்.
2. மாணவர்களிடம் எவ்வித கட்டணத் தொகையும் பெறக்கூடாது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்,
அனைத்து அரசு / நிதியுதவி பெறும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் / தனியார் பள்ளிகள்
வேலூர் மாவட்டம்.

நகல் –
1. மாவட்டக் கல்வி அலுவலர்,
   (இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள்) வேலூர் மாவட்டம்.
   (இவ்லுவலக மின்னஞ்சல் மூலமாக)
2. மேலாளர்,
   தினமலர் அலுவலகம்,
   153, பெங்களூர் சாலை,
   கொணவட்டம்,
   வேலூர் மாவட்டம் – 13